

அன்பும்
RICCERI

உலக சலேசிய இயக்கத்தின் தலைமைத் தந்தை.

புனித தொன்போஸ்கோவின் மறுஉரு.

மறைத்திரு ரிச்சரி அடிகளார் அவர்களே. வருக. வருக. வணக்கம்.

நிலவைக்கண்டு அல்லிப்பூ சிரிக்கும் - நல்ல
நீள் இரவில் வானப்பூ சிரிக்கும், மேக
நலங்கண்டு உழவர் மனம் சிரிக்கும், மெல்ல
தாய் முகத்தைக்கண்டு குழந்தை சிரிக்கும். தூய
நலந்தோய்ந்த தந்தை உங்கள் வரவு கண்டு
எங்கள் நெஞ்சமெல்லாம் சிரிக்கும் என்றால்
வேறென்ன சொல்வோம்.

அலைக்கடலைத்தாண்டி - எங்கள் நிலையை - நிலையங்களைக் காண வந்தீர். எங்கள் இதயங்களில் குடி புகுந்தீர். கனவிலும் நாங்கள் நினைக்கவில்லை தங்களைக் காண்போம் என்று - காண்கின்றோம், மனம் மகிழ்கின்றோம்.

பெற்றால்தான் பிள்ளையா? இல்லை இல்லை. அன்பை - ஆதரவைப் பெற்றாலும் பிள்ளைதான். தங்கள் அன்பை - ஆதரவைப் பெறும் பிள்ளைகள் நாங்கள். ஞானத் தந்தை நீர்.

எங்கள் பள்ளியும் - விடுதியும் தோன்றி முப்பத்தைந்தாண்டுகள் ஆகின்றன. ஒவ்வோர் ஆண்டும், எழுபது - என்பது பேரென நலம் பல பெற்று வெளியேறு கின்றனர். நூற்றுக்கணக்கில் நலம் பல பெற்று வாழ்கின்றோம். இந்நலன் களுக்கெல்லாம் காரணம் - தூரின் பட்டணத்து, தலைமையகத்து தந்தை என்றால் மிகையாகாது.

அன்புத்தந்தையே. இந்நலன்களுக்கெல்லாம் எங்கள் உளம் கனிந்த நன்றியை நவில்கின்றோம். தங்கள் வருகையால் எங்கள் இல்லம் பெருமை பெற்றது - எங்கள் உள்ளம் நிறைவு பெற்றது. தங்கட்கு எல்லாம் வல்ல இறைவன் நன்நலமும், நல்லருளும் - நாளும் இடையறாது பொழிய அவ்வல்லானை இறைஞ்சுகின்றோம் - இறைஞ்சுவோம்.

வாழ்க தொன்போஸ்கோ -

வாழ்க அவர் வழிவந்த தலைமைத் தந்தை.

இங்ஙனம்

குருக்களும் - ஆசிரியர்களும்
மாணவர்களும்.

தொன்போஸ்கோ நிலையம்,
காட்டுப்பாடி நகர்விரிவு.
27-2-1968.